வடிகால் வாரியத்தினுடைய தலைவர் திரு. உகம்சந்த் அவர்களின் திருக்கரத்தால் 2 இடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தத் திட்டங்கள் எப்போது செயல்படுத்தப்படும், எப்பொழுது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்த அரசு அடிக்கல் நாட்டிய எல்லா திட்டங்களையும் தொடர்ச்சியாக வரைமுறையாக ஒழுங்காகச் செய்து முடிக்கும்.

ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவையான உழவுக் கருவிகள் வழங்கல்.

25—(*வினா எண் 9654) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயக் கிடங்குகளில் விவசாயிகளுக்கு தேவையான உழவுக் கருவிகள் வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், பென்னகரம் விவசாயக் கிடங்கில் உழவுக் கருவிகள் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 1985–86-ம் வருடத்தில் பென்னகரம் விவசாயக் கிடங்கில் 6 எண்கள் ''விதை மற்றும் உரமிடும் கருவிகள்,' விநியோகிக்கப்பட்டுள்ளன.

1986–87-ம் ஆண்டில் அதிக அளவில் விவசாயக் கருவிகளை இக்கிடங்கின் இருப்பில் வைத்து விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் 1985–86 ஆம் ஆண்டில் விதை மற்றும் உரமிடும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1986–87 ஆம் ஆண்டிற்குக் கருவிகள் வழங்க கிடங்குகளில் வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதெல்லாம் இப்படிப்பட்ட விவசாயக் கருவிகள் வழங்குவதில் குறைபாடுகளிருப்பதால் அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. அத்தோடு விதை மற்றும் உரங்கள் கூட அவர்களுக்குத் தகுந்த, நியாயமான

விலையில் கிடைப்பது இல்லை. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் எல்லாப் பொருள்களும் எளிதாகக் கிடைக்கிற விதத்தில் அமைச்சர் அவர்கள் அந்த போர்டினுடைய ஆணையாளரிடத்திலே சொல்லி தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தவறுகள் எங்கே நடந்தாலும் அவற்றைக் களைய தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயக் கிடங்குகளின் மூலமாக உழவுக் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால் அவை யாருக்காக வழங்கப்படுகின்றனவோ அவர்களுக்குப் போய்ச் சேராமல், நலிந்தவர்களுக்குப் போகாமல் வல்லவர்கள் சிலருக்குப் போய்விடுகின்றன என்ற பிரச்னை இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி என்றால் யாருக்காக இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே போய்ச் சேருகின்ற வகையில் ஊராட்சிப் பெருந்தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் சேர்ந்த ஒரு குழு அமைத்து அவர்களின் நேரிடைப் பார்வையில் வழங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் பலவிதமான சலுகைகளை விவசாயிகளுக்குத் தந்து வருகிறார்கள். யாராவது தவறு செய்வார்களோ என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களின் முன்னாலே தான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அத்தோடு எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த விதமான கருவிகள் வழங்கப்படுகின்றன என்ற விவரங்களையும் வானொலி மூலமாகத் தெரிவித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கிடங்குகள் மூலமாக என்னென்ன பொருள்கள் வழங்கப்படுகின்றன என்பது குறித்து சரியான விளம்பரம் இல்லை. விவசாயிகளுக்கு அது பற்றி தெரிவதே இல்லை. அவர்களுக்கு விவரம் தெரியாததால் மானிய விலையில் விதை, உரம் போன்றவை கிடைப்பதே இல்லை. சப்சிடி கூட கிடைப்பதில்லை. சப்சிடியினால் வியாபாரிகள்தான் பயன் பெறுகிறார்களே தவிர விவசாயிகள் பயன் பெறுவதில்லை. ஆகவே தகுந்த விளம்பரங்களைக் கொடுக்க அரசு முன் வரவேண்டும் என்று விரும்புகிறேன். அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

1987 மார்ச் 3]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 722 வேளாண்மைத் தொழில் கூடங்கள் இயங்கி வருகின்றன. 20 அம்சத் திட்டத்தின் கீழ் உழவுக் கருவிகள் வழங்குவது, மற்றும் விதை வினியோகம், உரம் வினியோகம், சப்சிடி போன்றவற்றை வழங்குவது போன்ற பலவற்றை அரசு செய்துகொண்டு வருகிறது. அந்த வகையில் பல இடங்களில் ஒழுங்காக இருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. அப்படி ஒழுங்காக இல்லை என்று எந்த இடத்திலாவது தகவல்கள் வருமேயானால் அதற்குத் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது.

விளம்பரங்களைப் பொறுத்த வரையில் வானொலியில் காலை 7 மணிக்குள்ளாக எங்கெங்கே, என்னென்ன பொருள்களைக் கொடுக்கிறார்கள், உரங்கள், விதைகள், டிராக்டர்கள் போன்றவை எங்கெங்கே கிடைக்கின்றன என்பதை நாம் சொல்லிக் கொண்டு வருகிறோம். வானொலியைக் கேட்பவர்கள் அறியலாம் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் தனியார் பள்ளி ஆசிரியர்கள் அலுவலர்களுக்கு வைப்புநிதி வட்டியை அதிகரித்தல்.

26—(*வினா எண். 4832) திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், அலுவலர்களின் வைப்புநிதி வட்டி விகிதத்தை 5 சதவீதத்திலிருந்து 10.5 சதவீதமாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், அரசு அலுவலர்களைப் போன்று, பொது வருங்கால வைப்புநிதியாக 1987–88-லிருந்து மாற்றி அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு உதவி பெறுகிற தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் கிடைக்கிற வீடு கட்டுகிற லோன், திருமணக் கடன் போன்ற பல்வேறு சலுகைகள் நடைமுறையில் கிடைப்பதில்லை. ஒரே பணியைச் செய்கின்ற ஒரே துறையைச் சேர்ந்தவர்களுக்கு இருவித அளவுகோல் என்பது நியாயத்திற்குப் புறம்பானது ஆகும். எனவே, அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற